**100 % வாக்களிக்க உறுதி செய்வோம்!**
**ENSURE 100% VOTING!**

**பெருநகர சென்னை மாநகராட்சி**
**தேர்தல் செய்தி வெளியீடு**

**தே.செ.வெ.எண். 14** **நாள்: 23.03.2019**

**பாராளுமன்ற பொதுத்தேர்தல்–2019ல் "எந்த ஒரு வாக்காளரும் விடுபடக்கூடாது" (No Vote to be Left) என்ற குறிக்கோளுடன் 100% வாக்குப்பதிவை உறுதி செய்ய பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நடைபெற்ற இருசக்கர வாகன விழிப்புணர்வு பேரணியில் மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டார்.**

பாராளுமன்ற பொதுத்தேர்தல் 2019–ல் "எந்த ஒரு வாக்காளரும் விடுபடக்கூடாது" (No Vote to be Left) என்ற குறிக்கோளுடன் 100% வாக்குப்பதிவை உறுதி செய்ய பொதுமக்களிடம் பல்வேறு வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

அதனைத் தொடர்ந்து, சென்னை மாவட்ட தேர்தல் அலுவலகம் / பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் ஒவ்வொருவரும் வாக்களிப்பதன் அவசியம் குறித்தும், நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 3 பாராளுமன்ற தொகுதிகள் மற்றும் பெரம்பூர் சட்டமன்ற தொகுதியில் **100%** வாக்குப்பதிவு மேற்கொள்ள பல்வேறு விதமான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

இதன் ஒருபகுதியாக பெருநகர சென்னை மாநராட்சியின் திருவான்மியூர், மருந்தீஸ்வரர் ஆலயம் முதல் பாலவாக்கம் கடற்கரை வரை பொதுமக்களுக்கு வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த மாநகராட்சி அலுவலர்கள், ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் 350 நபர்கள் கலந்து கொண்ட இரு சக்கர வாகன விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. இப்பேரணியில் மாவட்ட தேர்தல் அலுவலர்/ பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

பின்னர், பாலவாக்கம் கடற்கரையில் நடைபெற்ற விழிப்புணர்வு முகாமில் மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் வாக்களிக்கும் முறை குறித்தும், யாருக்கு வாக்களித்தோம் என்பதனை உறுதிசெய்யும் வாக்காளர் சரிபார்ப்பு காகித தணிக்கை இயந்திரத்தின் (VVPAT) செயல்பாடுகள் குறித்தும் செயல்முறை விளக்கத்தை அளித்தார்.

தொடர்ந்து, பாலவாக்கம் கடற்கரையில் மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் அவர்கள் பாராசூட் மூலம் பறந்து சென்று விழிப்புணர்வு ஏற்படுத்தினார். மேலும், முதல்முறையாக வாக்களிக்கும் இளம் வாக்காளர்களில் 10 நபர்கள் பாராசூட் மூலம் பறந்து சென்று 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள்.

இவ்விழிப்புணர்வு பேரணியில் கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/துணை ஆணையாளர் (சுகாதாரம்) திரு.பி.மதுசுதன் ரெட்டி, இ.ஆ.ப., அவர்கள், தேர்தல் நடத்தும் அலுவலர்/ வட்டார துணை ஆணையாளர் டாக்டர் ஆல்பி ஜான் வர்கீஷ், இ.ஆ.ப., அவர்கள், மண்டல அலுவலர்கள், செயற்பொறியாளர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**